**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**OS.No.95/2014**
**நாள்.30.10.2025**
**வா.சா.2- செல்வம் என்ற சின்னத்தம்பி**
**த/பெ - சங்கர்**

**<u>2,3,5 மற்றும் 8ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

12. சர்வே எண்.1539, சர்வே எண்.1535/C க்கு கட்டுப்பட்ட சொத்து சம்பந்தமாக எனது பாட்டி பாப்பம்மாளும் எனது தந்தை சங்கரும் சேர்ந்து தெய்வானையம்மாளுக்கு ஒரு சீர்திருத்தபத்திரம் 06.03.1983ம் தேதியில் எழுதிக்கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

13. எதிர்வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து வாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

14. எனது தாயார் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்று தனது சாட்சியத்தில் கூறியுள்ள நிலையிலும், பதிலுரை தாக்கல் செய்யாத நிலையிலும், நிரூபண வாக்குமூலத்தில் ஆட்சேபணை செய்கிறேன் என்று கூறியிருப்பது வழக்கிற்கு முரணானது என்றால் சரியல்ல.

15. 09.01.1965ம் தேதியில் 1ம் பிரதிவாதியின் மனைவிக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி பத்திரத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்காக 06.03.1983ம் தேதி எழுதிக்கொடுக்கப்பட்ட சீர்திருத்தபத்திரம் பற்றி தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சர்வேஎண். 1535/C மற்றும் சர்வே எண்.1539 க்கு கட்டுப்பட்ட சொத்துக்கள் நீங்கலாக இதர சொத்துக்களுக்கு பாகம் கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

17. 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட ஈடுலாபகடன் நாளது தேதி வரை தீர்க்கப்படாமல் உள்ளது என்றால் தீர்க்கமுடியாது என்ற நிலையில் தான் சொத்தை எழுதிக்கொடுத்துள்ளார்.

18. வா.சா.ஆ.4ல் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட ஈடுலாபகடனை தீர்க்க முடியாததால் தான் கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்ற விவரம் வா.சா.ஆ.5ல் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

19. எனது தாயார் ஏற்கனவே அளித்துள்ள சாட்சியங்களை முறியடிக்கும் உள்நோக்கத்தோடு அதே விவரங்களை கூறி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20. வழக்கு விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் கூறினேன் என்று எனது தாயார் சாட்சியம் அளித்துள்ள நிலையில் வழக்கு சம்பந்தமாக நான் அளிக்கும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

21. வா.சா.ஆ.6 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் தனலட்சுமி தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்பதால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் அவர் கையெழுத்து போடவில்லை. எனினும் அந்த ஆவணம் செல்லத்தக்கது.

22. இந்த வழக்கை பொறுத்தவரை நானோ, எனது தாயாரோ எனது தகப்பனார் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல

23. ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்று எனது தாயார் சாட்சியம் அளித்துள்ள நிலையில் எனது தகப்பனார் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்று வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

24. தாவா சொத்தை நாங்கள் தான் அனுபவித்து விவசாயம் செய்து வருகிறோம் என்பதற்கு அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

25. பொன்னுச்சாமியின் தந்தை முனியாண்டி அம்பலம் என்றால் சரிதான். முனியாண்டிக்கு இரண்டு மனைவிகள் என்றால் தெரியாது. முனியாண்டிக்கு வீரமலை அம்பலம், பொன்னுச்சாமி அம்பலம், கருப்பண் அம்பலம் ஆகியோர் மக்கள் என்றால் சரிதான்.

26. முனியாண்டிக்கு வீரமலை அம்பலம், பொன்னுச்சாமி அம்பலம், கருப்பண் அம்பலம் ஆகிய மூவரும் அவர்களுக்குரிய பாகமான 3 ஏக்கர் 80 செண்ட் மற்றும் இதர சொத்துக்களை குமரன் செட்டியார் மகன் கோவிந்த செட்டியாருக்கு 21.08.1951ம் தேதியில் ஈடுகடன் லாப பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

மேற்படி வில்லங்கங்கள் ஏதேனும் இருக்கிறதா என்பதற்கு வில்லங்க சான்று பெறப்பட்டு பார்க்கப்பட்டதா என்றால் வில்லங்க சான்று பார்த்தோம்.

27. பாகம் பிரிக்கப்படாத நிலையில் தாவா சொத்து எனக்கு தனித்து பாத்தியப்பட்டதென கோருவதற்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கும் எந்தவித அறுகதையும் இல்லை என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B
Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**